# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1763/1 - 2012 ජූනි මස 18 වැනි සඳුදා - 2012.06.18

1763/1 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணிகளானது நகர அபிவிருத்திச் செயல்திட்டத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு உடனடியாக தேவைப்படுகின்றது என கருதுவதனால், குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

கொழும்பு,
2012, யூன் 11.

#### அட்டவணை - I

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலகம், கொழும்பு மாநகர சபை எல்லையினுள், வட்டாரம் இல. 01- மட்டக்குளியில் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். களுதந்திரி அவர்களால் 10.10.2002 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 675 இல் காட்டப்பட்ட மொத்த விஸ்தீரணமான 05ஏ. 00றூ. 26.0 பேர்ச். (2.0892 ஹெக்.) காணித்துண்டு இல. 01 :-

குறிப்பிட்ட காணித்துண்டின் மதிப்பீட்டு இல. விஸ்தீரணம் மற்றும் எல்லைகள் ஆவன:

காணித்துண்டு இல. 1 : மதிப்பீட்டு இல. 50, ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை

விஸ்தீரணம் : 05ஏ. 00றூ. 26.0 பேர்ச் (2.0892 ஹெக்)

வடக்கு : மதிப்பீட்டு இல. 70/105 ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை, மதிப்பீட்டு இலக்கங்கள் 427, 427/40, 435, 435/1 பேர்குசன் வீதி ;

கிழக்கு : மதிப்பீட்டு இல. 70/ 105 ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை, மதிப்பீட்டு இல. 421/ 1, பேர்குசன் வீதி, ம. தோ. அ. ச.(JEDB) இனால் உரிமைகோரும் காணி அத்துடன் பதிவு செய்யப்பட்டஉத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். களுதந்திரி அவர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 616 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகள் 1 மற்றும் 3 ;

தெற்கு : பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். களுதந்திரி அவர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 616 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகள் 1 மற்றும் 3, அத்துடன் மாதிரிப்பட இல. P. P. Co. 4944 இன் ஒரு பகுதி ;

மேற்கு : மாதிரிப்பட இல. P. P. Co. 4944 இன் ஒரு பகுதி யும் வீதியும் .

**கவனிக்க.**- 1762/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1762/45 ஆகும்.

**அட்டவணை** - II

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பிரதேச செயலகம், கொழும்பு மாநகர சபை எல்லையினுள்ளான முகத்துவார கிராம வட்டாரம் இல. 01 - மட்டக்குளியில் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். எம். ஜே. கோமஸ் அவர்களால் 2008.06.02 இல் தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. 9623 இல். காட்டப்பட்ட மொத்த விஸ்தீரணமான 08ஏ. 01றூ. 6.00 பேர். (3.3540 ஹெக்.) காணித்துண்டு இல. 01.*

*குறிப்பிட்ட காணித்துண்டின் மதிப்பீட்டு இலக்கங்கள் விஸ்தீரணம் மற்றும் எல்லைகள் ஆவன:*

*காணித்துண்டு இல. 1 : மதிப்பீட்டு இல. 19, ஹேனமுல்லை ஒழுங்கை.*

*விஸ்தீரணம் : 08ஏ. 01றூ. 6.00 பேர்ச் (3.3540 ஹெக்.)*

*வடக்கு :* *ம. தோ. அ. ச.* (JEDB) *இனால் உரிமைகோரப்பட்டதும், மாதிரிப்பட இல.* P. P. Co. *4944 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 1 ;*

*கிழக்கு :* *ம. தோ. அ. ச.* (JEDB) *இனால் உரிமைகோரப்பட்டதும், மாதிரிப்பட இல.* P. P. Co. *4944 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 1 மற்றும் ஹேனமுல்லை ஒழுங்கையும் ;*

*தெற்கு :* *ஹேனமுல்லை ஒழுங்கை மற்றும் வீடுகளுக்கான அணுகு வீதி ;*

*மேற்கு :* *மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை பிராணவாயு வணிகச் சங்கத்தினால் உரிமைகோரப்பட்ட மதிப்பீட்டு இல. 50, ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை, கொழும்பு மாநகர சபையினால் உரிமை கோரப்பட்ட மாதிரிப்பட இல. 60, ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை மற்றும் பஞ்ஞானந்த மாவத்தை.*

*7 - 26*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*